# விண்மீன்கள்

---

**Que.1. எதிர்கால இந்தியா வல்லமை பெற நம் நாட்டின் உள்வளத்திறமைகளைப் பொருத்தமுறைப் பயன்படுத்தல் வேண்டும் என்பது மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அத்துல்கலாமின் கருத்து. இதனைப் பற்றி உன் கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள். [Marks :(3)]**

**Ans.**

- இந்தியாவின் உள்வளத் திறமைகள்.
- பயன்படுத்தும் விதம்.
- மேம்படுத்தும் ஆலோசனைகள்.

**Que.2. கீழ்க்குறிப்பிடும் நூற்களுள் அறிவியல் சார்ந்த நூல். [Marks :(1)]**

**அ) வானத்தை அளப்போம் ஆ) சர்ப்பயாகம்**

**இ) கருவாச்சி காவியம் ஈ) கண்ணீர்ப்பூக்கள்**

**Ans.** அ) வானத்தை அளப்போம்

**Que.3. இந்திய மக்களின் ஆற்றல் உலக அரங்கில் மிளிர்கிறதா? மங்குகிறதா? என்னும் தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் நீ பேசும் தலைப்பிற்கான பட்டிமன்றக் குறிப்புகளைத் தயார் செய்க. [Marks :(3)]**

**Ans.**

- கருத்துக்கோர்வை 1
- மேற்கோள் 1
- விளக்கம் 1

**Que.4. இன்றையச் சூழலில் கல்வியும், வகுப்பறைச் செயல்பாடுகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், அதில் அறிவியலின் பங்கு என்பதினை முன்னிலைப் படுத்தி, பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுக. [Marks :(5)]**

**Ans.**

- தலைப்பு 1
- பிரச்சனை 1½
- அலசி ஆராய்தல் 1½
- தீர்வு 1

**Que.5. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் ‘பாக்கிய சாலிகள்’, அரைகுறை பாக்கிய சாலிகள், துர்பாக்கிய சாலிகள் என நம் மக்களைக் குறிப்பிடுகிறார். இதனை மையப்படுத்தி ‘பாரதமும் மக்கள் நிலையும்’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. [Marks :(5)]**

**குறிப்பு: வாழ்க்கைநிலை – பொருளாதார வளர்ச்சி – கல்வி நிலை – சுகாதாரம்.**

**Ans.**

- அமைப்பு 1
- மொழிநடை 1
- மக்கள் வாழ்க்கைமுறை, பொருளாதார நிலை 2
- சுகாதாரம், மேற்கோள் 1

**Que.6. “பால்போலும் இன்சொல் பவளம்போல் செந்துவர்வாய் [Marks :(3)]**

**சேல்போல் பிறழும் திருநெடுங்கண்”**

**இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

**Ans.**

- அணி (உவமையணி) 1
- அணி விளக்கம் 2

**Que.7. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் நாட்டின் உள்வளத்திறமை என்பதைப் பற்றிக் கூறும் கருத்துக்களைக் குறிப்பாக எழுதுக. [Marks :(3)]**

**Ans.**

- உள்வளத்திறமை விளக்கம்
- மொழிநடை

**Que.8. உன் பள்ளியில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியினைப் பத்திரிகைச் செய்தியாக எழுதி வெளியிடுக. [Marks :(3)]**

**Ans.**

- அமைப்பு 1
- செய்திக் சுருக்கம், தலைப்பு, மொழிநடை 2

**Que.9. “நெட்டும் டாட்காமும் [Marks :(2)]**

**ஈமெயிலும் எல்லாம்**

**நெருங்கிய நெருங்காத**

**அறிந்த அறிந்திராத**

**அனைத்தையும்**

**கணினியிலே ஒளிபரப்பி**

**அப்டேட் செய்திகளை**

**அடிக்கடித் தருகின்றது."**

**இப்பாடலில் இடம்பெற்றுள்ள அறிவியல் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

**Ans.** நெட்

டாட்காம்

அப்டேட்

ஈமெயில்

**Que.10. தொலைக்காட்சி மொபைல் போன்ற அறிவியல் சாதனங்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து விளக்கக் குறிப்பு எழுதுக. [Marks :(8)]**

**Ans.**

- தொடக்கநிலை 1
- காலம் காலமாகத் தொலைக்காட்சி, கைபேசி ஏற்பட்ட மாற்றங்கள் 2
- இவற்றின் நன்மை, தீமைகள், புதுமைகள் 1

**Que.11. 1989-ஆம் ஆண்டு தமிழக அரசின் சிறந்த அறிவியல் தமிழ் நூலுக்கான பரிசுபெற்ற நூல். [Marks :(1)]**

**அ) தண்ணீர்ச்தேசம் ஆ) ஹாலியில் வானூலா**

**இ) வானத்தை அளப்போம் ஈ) இவையொன்றுமில்லை**

**Ans.** இ) வானத்தை அளப்போம்

**Que.12. ஒரு இந்தியக் குடிமகன் ஓட்டுப்போடுவதற்குத் தகுதி பெறும் வயது.**

**அ) 16 ஆ) 21 இ) 18 ஈ) 19 [Marks :(1)]**

**Ans.** இ) 18

**Que.13. "தமிழில் அறிவியலைச் சொல்லுகிறபோது – நாம் விரைந்து செயல்படா விட்டால், பிற நாடுகளுக்கும் பின் தங்கிவிடுவோம்." என்று வானத் அளப்போம் நூலின் ஆசிரியர் நெல்லை சு.முத்து கூறுவதற்காக் காரணங்களைக் குறிப்பாக எழுதுங்கள். [Marks :(3)]**

**Ans.**

- வேகமான வளர்ச்சி நிலை.

- சொல்லவேண்டிய கட்டாயம்.
- கவன ஈர்ப்பின் அவசியம்.

**Que.14. ஒட்டுப்போவது என்பது நமது தலையாய கடமை என்பதை வலியுறுத்தி விளம்பரம் ஒன்று தயார் செய்க. [Marks :(2)]**

Ans.

- அமைப்பு
- விளக்கம்

**Que.15. பள்ளி இலக்கிய மன்றத்தில் நடைபெறும் பேச்சுப்போட்டியில் 'அறிவியல் வளர்ச்சியில் தமிழ் மொழியின் பங்கு' என்னும் தலைப்பில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுரை தயார் செய்க. [Marks :(4)]**

Ans.

- முகமன் 1
- கருத்து 1
- மேற்கோள் 1
- முடிவு 1

**Que.16. பள்ளிக்கலை விழாவில் நடைபெறும் கட்டுரைப் போட்டியில் 'தமிழ் இலக்கியங்கள் காட்டும் அறிவியல் சிந்தனைகள்' என்னும் தலைப்புக் கொடுக்கப்பட்டது. அதற்கானக் கட்டுரை தயார் செய்க. [Marks :(5)]**

**குறிப்பு:-**

**இன்றைய அறிவியல் செய்திகள்.**

**தமிழ் இலக்கியங்கள் அறிவியலுக்கு முன்னோடி.**

**இலக்கியத்தில் அறிவியல் சான்றுகள்.**

**Ans.**

- கருத்து 2
- மொழிநடை 1
- மேற்கோள் 1
- அமைப்பு 1

**Que.17. அறிவியல் வளர்ச்சி ஓட்டுப்போடும் முறையில் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது. அதுபோல் கல்வித்துறையில் கணினி ஏற்படுத்திய மாற்றங்களைப் பற்றி விளக்கும் விதம் 'கல்வியில் கணினி' என்னும் தலைப்பில் சொற்பாழிவுரை தயார் செய்க. [Marks :(5)]**

**குறிப்பு: கணினியின் பங்கு – கல்வியல் மாற்றம் – கல்வியில் முன்னேற்றம்.**

**Ans.**

- கணினியால் ஏற்பட்ட கல்விமாற்றங்கள், அமைப்பு 1
- அதன் நன்மை, தீமைகள் 2
- மொழிநடை 1
- மேற்கோள் 1

**Que.18. வாக்குச் சீட்டின் மூலம் ஓட்டுப்பதிவு; மின்னணு இயந்திரத்தின் மூலம் ஓட்டுப்பதிவு இரண்டின் நன்மை தீமைகளைப் பற்றி விமர்சனக் கண்ணோட்டத்தில் எழுதுக. [Marks :(4)]**

**Ans.**

- விளக்கம் 1
- நன்மை, தீமை 1
- விமர்சித்தல் 1

**Que.19. பள்ளியில் நடைபெறும் கட்டுரைப் போட்டியில் 'இந்திய தேர்தலும் மின்னணு இயந்திரமும்' என்ற தலைப்பு கொடுக்கப்பட்டது. இதற்கான கட்டுரை தயார் செய்க. [Marks :(5)]**

**குறிப்பு:**

**தேர்தல் முறை.**

**மின்னணு இயந்திர அறிமுகம்.**

**பின்னணு இயந்திரத்தின் பயன்பாடு.**

**மின்னணு இயந்திரத்தின் நன்மை.**

**Ans.**

- தேர்தலில் மின்னணு இயந்திர அறிமுகம் 1
- இயந்திரத்தின் பயன்பாடு 2
- நன்மைகள், மேற்கோள் 1
- மொழிநடை 1

**Que.20. வாக்குப்பதிவுக்காக வாக்குச் சாவடிக்குச் செல்லும்போது தேர்தல் ஆணையத்தால் கேட்கப்படும் அடையாள அட்டைகளில் ஏதேனும்[Marks :(2)]**

**ஆறினைக் குறிப்பிடுக.**

**Ans.**

- ஓட்டுநர் உரிமம்
- பான்கார்டு
- தேர்தல் ஆணைய அடையாள அட்டை
- வங்கிக் கணக்குப் புத்தகம்
- ஆதார் கார்டு
- பாஸ்போர்ட்

**Que.21. நமது இந்தியத் திருநாட்டின் தேர்தல் நடத்தும் முறைகளை விளக்கியும், மின்னணு இயந்திரம் பயன்பாடு குறித்தும் வெளிநாட்டில் உள்ள உன் நண்பனுக்குக் கடிதம் எழுதி தெரியப்படுத்தவும். [Marks :(4)]**

**Ans.**

- அமைப்பு 1
- உள்ளடக்கம் 2
- கருத்துத்தெளிவு 1

**Que.22. காலம் காலமாக இந்தியத் தேர்தல் வாக்குப்பதிவில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்துக் குறிப்பாக எழுதுக. [Marks :(3)]**

**Ans.**

- குடவோலை முறை
- வாக்குச்சீட்டு
- மின்னணு இயந்திரம்

**Que.23. தலைமைத் தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம். [Marks :(1)]**

**அ) கொல்கத்தா ஆ) மும்பை**

**இ) டில்லி ஈ) சென்னை**

**Ans**. இ) டில்லி

**Que.24. தற்போதைய இந்தியத் தலைமைத் தேர்தல் அதிகாரி. [Marks :(1)]**

**அ) டி.என்.சேசன் ஆ) V.S.சம்பத்**

**இ) H.S.பிரக்மா ஈ) நசீம்ஜைதீன்**

**Ans.** ஈ) நசீம்ஜைதீன்

**Que.25. குடவோலை தேர்தல் முறை குறிப்பு எழுதுக. [Marks :(3)]**

**Ans.**

- கருத்து 1

- விளக்கம் 1

**Que.26. குழுவில் பொருந்தாததைத் தேர்வு செய்க. [Marks :(1)]**

**அ) பென்டிரைவ், சி.டி, டி.வி.டி.**

**ஆ) மொபைல், சிம்கார்டு, மெம்மரி கார்டு**

**இ) ஸ்மார்ட்போன், மிக்சி, கிரைண்டர்**

**ஈ) கம்ப்யூட்டர், லேப்டாப், டெஸ்க்டாப்.**

**Ans.** இ) ஸ்மார்ட்போன், மிக்சி, கிரைண்டர்

**Que.27. வினா [Marks :(4)]**

**அறிவு வளர்ந்தது**

**அறிவியல் வளருது**

**உலகம் தாண்டிய உண்மைகள் எல்லாம்**

**வெளிச்சமாக இங்கே திரையில் தெரியுது.**

**மண்ணுலகம் மறந்து**

**விண்ணுலகம் போனான்**

**மனித மடமைகளை உடைத்து காட்டினான்**

**நிலவில் பாட்டு கதையெல்லாம் மறுத்து**

**பாறை இருப்பை படம் போட்டு காட்டினான்.**

**அமலா.**

**பாடலினை நயம் பாராட்டி எழுதுக**

**Ans.**

- மையக்ருத்து 1
- பொருள்நயம் 1
- சொல்நயம் 2

**Que.28. பள்ளி அறிவியல் மன்றம் சார்பில் நவம்பர் 10-ஆம் தேதி பள்ளி வளாகத்தில் நடைபெறும் மாபெரும் அறிவியல் கண்காட்சியினை அறிவிக்கும் பொருட்டுச் சுவரொட்டி தயார் செய்க. [Marks :(3)]**

**Ans.**

- அமைப்பு 1

- இடம், தேதி 1
- தலைப்பு 1

**Que.29. பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் நடைபெறும் கட்டுரைப்போட்டிக்காக 'கணிப்பொறியின் நன்மைகள்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. [Marks :(5)]**

**Ans.**

- அறிவியல் கண்டுபிடிப்புகள்
- கணினியின் பாகங்கள்
- கணினியின் பயன்கள்
- கணினியின் சாதனைகள்.

**Que.30. கீழே குறிப்பிடப்பட்டவற்றுள் கணிப்பொறியுடன் பொருந்தாததைத் தேர்வு செய்க. [Marks :(1)]**

**அ) பென்டிரைவ் ஆ) மானிட்டர்**

**இ) குறுந்தகடு ஈ) டங்ஸ்டன்**

**Ans.** ஈ) டங்ஸ்டன்

**Que.31. கணிப்பொறியின் மேன்மைகளை அறியும் பொருட்டு உன் பள்ளிக் கணினி ஆசிரியரிடம் நெர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயார் செய்க. [Marks :(3)]**

**Ans.** பொருத்தமான ஆறு வினாக்கள்

**Que.32. 'அறிவியல் வளர்ச்சியில் கணினியின் பங்கு' என்னும் தலைப்பில் அறிவியல் மன்றத்தில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு தயார் செய்க. [Marks :(3)]**

**Ans.**

- தொடக்கம் 1
- கருத்து, மேற்கோள் 2
- முடிவு 1

**Que.33. பொருத்தி எழுதுக. [Marks :(2)]**

**அ) இண்டர்நெட் - விசைப்பலகை**

**ஆ) மௌஸ் - சாளரம்**

**இ) கீபோர்டு - இணையம்**

**ஈ) விண்டோஸ் – சுட்டெலி**

**Ans.** அ) இண்டர்நெட் - இணையம்

ஆ) மௌஸ் - சுட்டெலி

இ) கீபோர்டு - விசைப்பலகை

ஈ) விண்டோஸ் – சாளரம்

**Que.34. “அறிவியல் உலகில் கணினியைப்போல் அதிசயம் வேறு இல்லையம்மா” என்று டேவிட்பிரதாப் சிங் கூறுவது பொருத்தப்படுமா? எனில் உன் கருத்துகளைக் குறிப்பாக எழுதுக. [Marks :(3)]**

**Ans.**

- உலகத்தைத் தன் கட்டுப்கோப்புக்குள் வைத்திருக்கிறது.
- வேலைகள் எளிமையாக்குகிறது.
- மனிதனின் பன்முக வேலைகளுக்கு உதவுகிறது.
- கணினியின் துணைகொண்டு சாதனைகள் புரிந்திடப் பயன்படுகிறது.

**Que.35. மொழி அறிவனை வளர்ப்பதற்குக் குணினியின் பயன்பாடு குறித்துக் குறிப்பு எழுதுக. [Marks :(3)]**

**Ans.**

- தகவல்கள் திரட்டலாம்
- கவிதை, கதை தேர்வு செய்யலாம்.
- அகராதியாகப் பயன்படுத்தலாம்
- பட்டிமன்றம், சொற்பொழிவு ஆகியவற்றின் மூலம் அறிவு உருவாக்கலாம் (இதுபோல்).

**Que.36. கீழ்க்காண்பவற்றுள் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களுக்குப் பொருத்தப்படாததைத் தேர்வு செய்க. [Marks :(1)]**

**அ) ஏவுகணை நாயகன்**

**ஆ) முன்னாள் குடியரசுத் தலைவர்**

**இ) சட்ட மாமேதை**

**ஈ) அறிவியல் மாமேதை**

**Ans.** இ) சட்ட மாமேதை